2019 ஜூலை 5]

அவர்கள் முன்வருவார்கள் என்று சொன்னால், உடனடியாக உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மனோகரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

47—

ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

***38078—திரு. அ. மனோகரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி, சிவகிரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வாசுதேவநல்லூர் தொகுதி, சிவகிரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கேதுவாக, நிலம் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மனோகரன் அவர்கள்.*

திரு. அ. மனோகரன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் வணங்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தமிழகத்தில் நல்லாட்சி புரிந்துகொண்டிருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் ஐயா*

[2019 ஜூலை 5

அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கின்ற வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதியின் அனைத்து பகுதிகளுமே தஞ்சைக்கு அடுத்தபடியாக விளைநிலங்கள் அதிகம் நிறைந்த பகுதி. குறிப்பாக, நெல், பருத்தி, கரும்பு, மக்காச்சோளம், எலுமிச்சை மற்றும் பிற தானியங்கள் எல்லாம் விளையக்கூடிய விவசாயம் நிறைந்த பகுதியாக உள்ளது. விளைபொருட்களையெல்லாம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு எடுத்துச் சென்று விற்பனை செய்யும் நிலை உள்ளது. ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஆரம்பித்த காலத்திலிருந்து வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. தானியங்களையெல்லாம் எடுத்துச் செல்லும்போது குறிப்பாக மழைக்காலங்களில் தானியங்கள் சேதமடையக்கூடிய சூழ்நிலை ஏற்படுகின்றது. ஆகையால் விவசாய நண்பனாக விளங்கிக்கொண்டிருக்கக்கூடிய தமிழ்நாடு அரசின் சார்பில், விவசாயிகளின் நலனைக் கருதி, அங்கேயுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் சொந்தக் கட்டடத்தில் இயங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இடத்தை உடனடியாகத் தேர்வு செய்து, கட்டடம் கட்டித்தர ஆவன செய்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிவகிரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு தகுதியான அரசு புறம்போக்கு நிலம் ஏதும் கிடைக்கப்பெறவில்லை. எனவே, தனியாரிடமிருந்து நிலம் கையகப்படுத்திட முழுவீச்சில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், சிவகிரியிலிருந்து 30 கி.மீ. தொலைவிலுள்ள சங்கரன்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடமும், 40 கி.மீ. தொலைவிலுள்ள கடையநல்லூர் விற்பனைக் கூடமும் சொந்தக் கட்டடத்தில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் செயல்பட்டு வருகின்றன. இதனை வாசுதேவநல்லூர் பகுதி விவசாயிகளும் தற்போது பயன்படுத்திக்கொள்ளலாம். மேலும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணையின்படி மிக விரைவில் நிலம் கையகப்படுத்தும் பணி நிறைவடைந்தவுடன் சிவகிரி*

2019 ஜூலை 5]

ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குப் புதிய சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படும் என்ற விவரத்தினை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மனோகரன் அவர்கள்.*

திரு. அ. மனோகரன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது உண்மைதான். எனது தொகுதியிலிருந்து கடையநல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கும், சங்கரன்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கும் தானியங்களை கொண்டுசெல்கின்றபோது போக்குவரத்து விரயம் ஏற்படுகின்றது. ஆகையால், சிவகிரி பகுதியிலேயே, சிவகிரி வட்டம், சிவகிரி வருவாய் கிராமம்–1, விஸ்வநாதபேரி, தருமபுரி கிராமப் பகுதியிலேயே 7 ஏக்கர் அரசு நிலம் இருக்கின்றது. அதுபோல சிவகிரி வட்டம், நாரணபுரம் வருவாய் கிராமம்–1–ல் சுமார் 2 ஏக்கர் நிலம் இருக்கின்றது. கடந்த முறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு சென்று நானும் அதனை பார்த்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று இதனை விரைந்து செயல்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டு, நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கோரிக்கையை ஏற்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம் அந்த இடத்திற்கான விவரங்களைப் பெற்று உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் கே. அர்ச்சுணன் அவர்கள்.*

திரு. அம்மன் கே. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் அவர்களையும், எங்கள் கொங்கு நாட்டின் தளபதி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களையும், தங்களையும் வணங்குகிறேன்.

கோவை தெற்கு தொகுதிக்குட்பட்ட பகுதியில் அண்ணா காய்கறி market உள்ளது. இங்கு கோவை, நீலகிரி, திருப்பூர் ஆகிய மாவட்டங்களிலிருந்து அதிகளவில் காய்கறிகள் வருகின்றன. அவற்றை பாதுகாக்க குளிர்பதன வசதியுடன்கூடிய கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டத்திலே மட்டும் மொத்தம் 12 குளிர்பதன கிடங்குகள் இருக்கின்றன. எனவே, கோவை தெற்கு தொகுதிக்கு தேவையிருப்பின், ஆய்வுகளை மேற்கொண்டு அங்கு குளிர்பதன கிடங்கு அமைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

48—

கிராம நிருவாக அலுவலகம்

***35780—திரு. C.V. சேகர்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—